செப்டம்பர் 29

## *அதிதூதர்களான புனித மிக்கேல், கபிரியேல், ரபேல்*

மிக்கேல் என்றால் "இறைவனுக்கு இணை யார்?" என்பது பொருள். இச்சொற்களுடன், மோட்சத்தில் சாத்தானையும் அவனுடைய சகாக்களையும் எதிர்த்து நல்ல சம்மனசுக்கள் போரிட்டார்கள். முக்கியமான வானதூதர்களில் மிக்கேல் ஒருவர்; சாத்தானை முறியடித்தவர்களின் தலைவர். அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்தே திருச்சபையின் பாதுகாவலராக வந்திக்கப்பட்டு வருகிறார். தனி நபர்களும், பங்குகளும், மறைமாவட்டங்களும் இவரைத் தங்களது பாதுகாவலராக தேர்ந்தெடுக்கிறார்கள்.

புனித 13-ஆம் சிங்கராய பாப்பானவர் ஒரு நாள் பேசிக் கொண்டிருக்கையில் திடீரென மயங்கிவிழுந்தார். அவர் இறந்து போனார் என்று எல்லோரும் நினைத்தார்கள். எழுந்த பின் அருகிலிருந்தவர்களைப் பார்த்து "நான் மயக்கமுற்றுக் கிடக்கையில் வருங்காலத்தில் திருச்சபைக்கு வர இருந்த சங்கடங்களை கடவுள் எனக்குக் காட்டினார். திருச்சபை அழிந்து விடுமோ என்று அஞ்சி நடுங்கினேன். அப்பொழுது திடீரென புனித மிக்கேல் அதிதூதர் தம் சகாக்களுடன் வந்து எதிரிகளை விரட்டியடித்து திருச்சபையைக் காத்தார்" என்று கூறி உடனே ஓர் அழகிய செபத்தை (அதிதூதரான புனித மிக்கேலே என்று தொடங்கும் செபத்தை) எழுதி அதை ஒவ்வொரு நாளும் திருப்பலிக்குப் பின் செபிக்கும்படி கட்டளையிட்டார். அந்த நல்ல வழக்கத்தை கைவிட்டதனாலேயே திருச்சபைக்கு இத்தனை தொல்லைகள் வந்திருக்கின்றன என்று சிலர் கருதுகின்றனர்.

கபிரியேல் என்றால் "இறைவனின் பலம்" என்பது பொருள். கடவுளது வல்லமையையும் மகிமையையும் காட்டும் ஒவ்வொரு வேலையிலும் இவர் தூதராக அனுப்பப்படுகிறார். இரட்சகரது வருகையையும், அவர் வரும் காலத்தையும் இவர் முன்னறிவித்தார். இரட்சகரின் முன்னோடியின் பிறப்பையும் இவர் அறிவித்தார். வார்த்தையானவர் மாமிசமான போது இவர் பிரசன்னமாய் இருந்தார். இரட்சகரை ஆராதிக்க இடையர்களை அழைத்தவரும், புனித கபிரியேலே, ஒலிவ மரத்தோப்பில் இயேசுவைத் தேற்றியவரும் புனித கபிரியேல் என பிதாக்கள் கூறுகிறார்கள். இவர் ஆறுதலின் தூதர், இரக்கத்தின் தூதர், பழைய ஏற்பாட்டிலும் இவரைப் பலமுறை பார்க்கிறோம். முதலில் தானியேல் இறைவாக்கினருக்கு இவர் தோன்றினார். தானியேல் பாரசீக, கிரேக்க இராட்சியங்களைக் காட்சியில் கண்டபின் இவர் தோன்றினார். கபிரியேல் எவ்வளவு மாட்சியுடன் இருந்தார் என்றால் தானியேல் நடுங்கி முகம் குப்புற விழுந்தார். கிறிஸ்து அரசர் வர இத்தனை வாரங்கள் பிடிக்கும் என்று தானியேலுக்கு அறிவித்தவரும் இவரே.

ரபேல் என்னும் சொல்லுக்கு "இறைவன் குணமாக்கினார்" என்பது பொருள். தொபியாசுக்கு இவர் அசரியாஸ் என்னும் பெயருடன் தோன்றி அவருடைய மகனை அழைத்துச் சென்று பத்திரமாய்த்

திரும்பக் கொண்டு வந்தார். அவருக்கு வரவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொடுத்தார். மீனின் வாயிலிருந்து இளைஞனைக் காத்தார். தொபியாஸ் திரும்பக் கண்பார்வை பெறச் செய்தார். “இறைவனின் சிம்மாசனத்துக்கு முன் நிற்கும் ஏழு தூதர்களில் நான் ஒருவன், என் பெயர் ரபேல்” என்று அறிவித்தார்.

**சிந்தனை:**

திருச்சபையைக் காக்கும்படி புனித மிக்கேலை அடிக்கடி இறைஞ்சுவோம்.

**செபம்:**

அதிதூதரான புனித மிக்கேலே, கபிரியேலே, ரபேலே, இன்று சாத்தானோடு இறுதிப் போர் நடத்தும் அனைவர் மேலும் இரக்கமாயிரும்.